நாள்: 16.07.2026
OP 259/2025
பெயர் மணிமேகலை
ம.சா.1

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என் கணவர் பழைய பிரச்சனைகளை எல்லாம் மறந்து என் காலில் விழுந்து கூட மன்னிப்பு கேட்டு சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை. என் குழந்தையை நான் தான் பொறுப்பேற்று கொண்டு அவருக்கு கல்வி, திருமணம் போன்ற அனைத்து செலவுகளையும் நானே செய்து கொள்கிறேனா என்றால் அந்த செலவுகளை என் கணவர் செய்யவேண்டும். என் மகளை என் கணவரிடம் ஒப்படைத்தால் தான் அவர் குழந்தைக்கு வேண்டிய அனைத்து செலவுகளையும் செய்வார் என்றால் நான் குழந்தையை ஒப்படைக்க முடியாது. என்னை நானே பராமரித்து கொள்கிறேன். என் மகள் திண்டுக்கல் பஞ்சம்பட்டியில் உள்ள அகஸ்தினார் மேல்நிலையப்பள்ளியில் 6ம் வகுப்பு படிக்கிறார். அவர் அங்கு பள்ளி விடுதியில் தங்கி படித்து வருகிறார். ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பார்க்கும் நேரத்தில் என் கணவர் என் மகளை சென்று பார்ப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது.

என் கணவர் கல்வி கட்டணத்தை பாதியை செலுத்த தயாராக இருந்தால் என் மகளை பள்ளியிலோ, விடுதியிலோ சென்று பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை கிடையாது. என் மகள் மேல்வகுப்பு கல்லூரியில் முடிக்கும் வரை என் மகளை பார்ப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. நான் விவாகரத்து தவிர வேறு எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் என் 5 பவுன் நகை என் கணவரிடம் உள்ளது. 5 பவுன் நகை வைத்து தான் தாண்டிக்குடியில் தடியன் குடிசை என்ற பகுதியில் 5 சென்ட் நிலம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என் கணவர் பெயரில்இருந்த 5 சென்ட் நிலத்தை என் தந்தை பெயரில் எழுதி வாங்கி கொண்டார் என்றால் என் தந்தை சொத்து அதனால் அவர் எழுதி வாங்கி கொண்டார். என் நகையை வைத்து 5 சென்ட் நிலம் வாங்க வேண்டும் என நான் தான் கூறினேன் என தற்போது அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் என் கணவருக்கு எந்த சிரமும் கொடுக்காமல் இருந்தால் அவர் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறார் என்றால் நான் அவர் விவாகரத்துக்கு சம்மதிக்கும் பட்சத்தில் அவரை நான் எந்த தொந்தரவும் செய்யமாட்டேன். நான் சேர்ந்து வாழ மாட்டேன் என பிடிவாதமாக மறுத்து வருகிறேன் என்பதாலும், என் கணவருக்கு சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், நான் மறுப்பதால் அவர் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறார் என்றால் சரிதான்.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.16 18:19:12 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 16.07.2026 OP 259/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | எ.ம.சா.1 | | | |

---

முதல் விசாரணை

நான் மனுவின் எதிர்மனுதாரர்,. என்னுடைய ஆதார் அட்டை எ.ம.சா.ஆ–1 ஆகும். என்னுடைய மனைவி பிடிவாதமாக சேர்ந்து வாழ மறுப்பதால் நான் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன் என்றால் சரிதான். என் மகளை நான் பார்க்கவேண்டும்.

குறுக்கு விசாரணை

என் குழந்தைக்கு 10 வயது ஆகிறது. எனக்கு திருமணம் ஆகி 17 ஆண்டுகள் ஆகிறது. என் மகளுக்கு பராமரிப்பு செலவை நான் பாதியாக ஏற்றுக்கொள்கிறேன். விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன்.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.16 18:19:21 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்